முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2025 சனவரி

## (104) வணிகச் சூழல்

(Business Environment)

2025-02-09
பிற்பகல்
[02.00 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**
  (1) ***காலம் :*** *03 மணித்தியாலங்கள்*
  (2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*
  (4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.10*** *வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக*

**1.1** கீழ்வருவனவற்றுள் மனித விருப்பங்களை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி எது?

(1) வேலைப் பாதுகாப்பு, உறைவிடம், உணவு. (2) நீர், உறைவிடம், உணவு.
(3) சட்டைகள், வேலைப் பாதுகாப்பு, பாண். (4) உணவு, வேலைப் பாதுகாப்பு, மேற்சட்டை.

**1.2** வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றினது பணிப்பாளர்களின் ஆகக்குறைந்த எண்ணிக்கையை கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க:

(1) 1. (2) 7. (3) 5. (4) 2.

**1.3** கீழ்வருவனவற்றில் வணிகத்தின் உள்ளகச் சூழலின் ஒரு மாறி (variable) **அல்லாதது** எது?

(1) நிறுவன கலாசாரம். (2) வழங்குநர்கள்.
(3) முகாமைக் கட்டமைப்பு. (4) நோக்குக் (Vision) கூற்று.

**1.4** கீழ்வருவனவற்றில் பணச் சந்தை தொடர்பான சரியான கூற்று எது?

(1) பங்குகளும் தனிச்சங்களும் பணச் சந்தையின் சாதனங்கள் (instruments) ஆகும்.

(2) இது, ஒரு வருடத்திற்கும் மேலான முதிர்வுக்கான நிதிச் சொத்துக்களை வியாபாரம் செய்வதற்கான சந்தை ஆகும்.

(3) பணச் சந்தையின் பிணையங்களை (securities) விற்கவும் வாங்கவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் பயன்படுத்தப்படுகிறது.

(4) இலங்கை மத்திய வங்கியும் வர்த்தக வங்கிகளும் பணச் சந்தையின் பிரதான நிறுவனங்கள் ஆகும்.

**1.5** கீழ்வருவனவற்றுள் எது நிகழ் நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் ஒரு பங்கேற்பாளர் **அல்ல**?

(1) ஊழியர் நம்பிக்கை நிதியம்.

(2) இலங்கை மத்திய வங்கி.

(3) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்.

(4) அரசாங்கப் பிணையங்களின் முதன்மை விற்பனையாளர்கள் (primary dealers).

**1.6** கீழ்வருவனவற்றில் எது தொடர்பாடல் செயன்முறையின் ஒரு மூலகம் (element) **அல்ல**?

(1) அனுப்புநர். (2) இடர். (3) பின்னூட்டம். (4) தகவல் தடம்.

**1.7** கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க :

**(a)** கடுமையான போட்டிகளை எதிர்கொள்ள புதிய பொருள்களை உருவாக்குதல்.

**(b)** இருக்கின்ற வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்த வணிகங்களைப் பல்வகைப்படுத்தல்.

**(c)** பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த அதிக பொருள்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்தல்

மேலுள்ளவற்றில், தொழில்முயற்சியாண்மையின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைவது / காரணங்களாக அமைவன :

(1) **(a)** மாத்திரம். (2) **(c)** மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய யாவும்.

**1.8** ஒரு காப்புறுதியைப் பெறுவதன் மூலம், ஒரு தனியாள் ;

(1) கடன்பட்டோர் ஒருவரிடம் இருந்து கடனை மீளப்பெற முடியாத இடரைக் காப்பீடு செய்யலாம்.

(2) எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வியாபார இழப்புகளைக் காப்பீடு செய்யலாம்.

(3) முகாமையாளர்களின் தீர்மானத்தினால் ஏற்படும் இழப்புகளைக் காப்பீடு செய்யலாம்.

(4) சந்தை மாற்றத்தினால் ஏற்படும் இழப்புகளைக் காப்பீடு செய்யலாம்.

**1.9** கீழ்வருவனவற்றில் எது காப்புறுதியின் ஒரு கோட்பாடு **அல்ல**?

(1) இழப்பீடு (indemnity)

(2) நெருக்கமான காரணம் (proximate cause)

(3) இரகசியத்தன்மை (confidentiality)

(4) காப்புறுத்தத்தக்க நாட்டம் (insurable interest)

**1.10** காசோலையின் குறுக்குக்கோடிடலை இரத்துச் செய்யக்கூடிய நபர்:

(1) வரையுநர் (Drawer).

(2) வங்கி (Bank).

(3) பெறுநர் (Drawee).

(4) பணம் பெறுபவர் (Payee).

*கீழே இல **1.11** தொடக்கம் **1.15** வரையில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உங்களது விடைகளை (சரியானது / தவறானது) தரப்பட்டுள்ள விடைப் புத்தகத்தில் எழுதவும்.*

**1.11** ஒரு நாட்டதாரர் (stakeholder) என்பது ஒரு நிறுவனத்தில் ஆர்வம் அல்லது அக்கறை கொண்ட ஒரு நபர், குழு அல்லது நிறுவனம் ஆகும்.

**1.12** வணிக வாய்ப்புகளை இனங்கண்டு, புத்தாக்கம் மற்றும் இடர் முகாமைத்துவம் ஊடாக மனிதத் தேவைகளைத் திருப்திப்படுத்துதல் தொழில்முயற்சியாண்மை எனப்படுகிறது.

**1.13** பணச் சந்தையை முதன்மைச் சந்தை எனவும் இரண்டாம் நிலைச் சந்தை எனவும் பிரிக்கலாம்.

**1.14** கடன் அட்டை (credit card) என்பது இலத்திரனியல் - பணத்திற்கான (E-money) ஓர் உதாரணம் ஆகும்.

**1.15** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் (SMEs) இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கணிசமான சதவீதத்தைப் (%) பங்களிப்புச் செய்கின்றன.

*இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.16** தொழில்முயற்சியாண்மையின் இரண்டு (02) புதிய போக்குகளை இனங்காண்க.

**1.17** SMEகளின் தோல்வியில் தாக்கம் செலுத்துகின்ற இரண்டு (02) சூழற் காரணிகளைக் குறிப்பிடுக.

**1.18** "முறைசார் (Formal) அமைப்பு" மற்றும் "முறைசாரா (Informal) அமைப்பு" ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

**1.19** மூலதனச் சந்தையில் உள்ள கருவிகளுக்கு (instruments) இரண்டு (02) உதாரணங்களைக் குறிப்பிடுக.

**1.20** பிற்தேதியிடப்பட்ட காசோலை என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

**ஆன் பெரேரா** என்பவர் 2020 ஆம் ஆண்டு **ஆன் எண்டபிரைசஸ்** என்ற பெயரில் ஒரு தனியுடமை வியாபாரத்தை ஆரம்பித்தார். உலகளாவிய சந்தைக்கு அவருடைய வியாபாரத்தை விரிவாக்கும் பொருட்டு, **ஆன்** தனது வியாபாரத்தை வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றாக மாற்றுவதற்குத் திட்டமிடுகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒரு தனியுடமை வியாபாரத்தின் இரண்டு (02) பிரதிகூலங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியைக் கூட்டிணைப்பதற்குத் தேவையான மூன்று (03) ஆவணங்களை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(c) ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியின் இரண்டு (02) அம்சங்களை (features) **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

**அவிஷ்** என்பவர் தேங்காய் உற்பத்திப்பொருள் செயன்முறைப்படுத்தல் வணிகத்தில் ஈடுபடும் ஒரு சிறிய அளவு வணிகத்தின் உரிமையாளர் ஆவார். அவர் உற்பத்தியை எளிதாக்குவதற்காக ஒரு புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்ய வர்த்தக வங்கியொன்றிடமிருந்து கடனைப் பெற்றுக் கொண்டார். இந்த முதலீடு வணிகத்தின் உற்பத்திக் கொள்ளளவை அதிகரிக்க உதவியது. வங்கியின் நிதிச் சேவைகள் நிதியை முகாமை செய்வதற்கும் உரிய நேரக் கொடுப்பனவுகளை உறுதி செய்வதற்கும் உதவின. **அவிஷ்** தனது வணிகத்தின் நிதிச் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கு அடிக்கடி காசோலைகளைப் பயன்படுத்துகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) பணத்தின் ஒரு பிரதான தொழிற்பாடாக "பரிமாற்ற ஊடகம்" என்பதை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(b) ஒரு வணிக நிறுவனம் வர்த்தக வங்கிகளில் பேணக்கூடிய இரண்டு (02) வகையான கணக்குகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) வணிக ரீதியான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும்போது, காசை விட காசோலையைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நான்கு (04) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

நெறிமுறை நடத்தைக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலமும் நாட்டதாரர்களுக்கான அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதன் மூலமும் நிலைபேறான நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலமும் ஒரு செழிப்பான வணிகம் செயல்படுகிறது. நெறிமுறைக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதானது நம்பிக்கையை வளர்த்து, முதலீடுகளை ஈர்ப்பதுடன் கம்பனியின் புகழையும் உயர்த்துகிறது. நிலைபேறான நடைமுறைகளை ஏற்றுக்கொள்வதானது சூழல் தாக்கத்தைக் குறைப்பதுடன் ஆரோக்கியமான பூமிக் கிரகத்திற்கும் பங்களிப்புச் செய்து, நீண்ட கால நம்பகத்தன்மையை ஊக்குவிக்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நெறிமுறைக் கோவையிலிருந்து (Code of Ethics) ஒரு வணிக நிறுவனம் எதிர்பார்க்கும் மூன்று (03) நன்மைகளைப் **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(b) ஒரு கம்பனி சமூகப் பொறுப்புடைமையை அடைந்து கொள்வதற்கு அறிமுகப்படுத்த வேண்டிய இரண்டு (02) தந்திரோபாயங்கள் / நடவடிக்கைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) நிலைபேறான நடைமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு வணிகம் பெற்றுக்கொள்ளக்கூடிய மூன்று (03) நன்மைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

இலங்கையின் பாரம்பரிய இறக்குமதி – ஏற்றுமதித் தளமானது இலத்திரனியல் வர்த்தக வளர்ச்சியால் உந்தப்பட்டு, மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது. இயங்கலை (ஒன்லைன்) சந்தைத் தளங்கள் மற்றும் டிஜிடல் கொடுப்பனவு முறைமைகள் என்பன பாரம்பரிய வர்த்தக வழிமுறைகளைச் சீர்குலைத்து, ஒப்பிட முடியாத சௌகரியம் மற்றும் அணுகலை வழங்குகின்றன. இந்தப் போக்கானது வணிகங்கள் தங்கள் சந்தைகளை விரிவுபடுத்துவதற்கும் கிரயங்களைக் குறைப்பதற்கும் புதிய வழிகளைத் திறக்கின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) வெளிநாட்டு வர்த்தகத்தில் (சர்வதேச வர்த்தகத்தில்) பயன்படுத்தப்படும் இரண்டு (02) பிரதான ஆவணங்களை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) நவீன உலகிற்கு ஏற்றவாறு இலங்கையின் பாரம்பரிய வர்த்தக நடவடிக்கைகளில் பின்பற்ற வேண்டிய இரண்டு (02) புதிய போக்குகளை (new trends) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) இலத்திரனியல் வர்த்தகத்தைப் (e-commerce) பயன்படுத்தி, வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ளும் மூன்று (03) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**ஆரியல்** என்பவர் **ஆரியல் டெக்ஸ்டைல்ஸ்** என்ற ஒரு தனியுடமை வியாபாரத்தை ஆரம்பித்து, குழந்தைகளுக்கான ஆடைகள் வணிகத்தில் ஈடுபட்டு வருகிறார். அவர் தனது வணிகச் செயற்பாடுகளை ஏற்றுமதிச் சந்தைக்கு விரிவாக்குவதில் கவனம் செலுத்துகிறார். அவர் தனது வணிகத்தை ஒரு லரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக மாற்றுவதற்காக, அதிக மூலதனத்தைத் திரட்டுவதற்கும் வணிகத்தின் சவால்களை இனங்காண்பதற்கும் ஆலோசகர் ஒருவரை பணியமர்த்தியுள்ளார்.

இப்போது அவர் இலங்கையில் நான்கு தொழிற்சாலைகளைக் கொண்டிருக்கின்றார். திறமையான தொழிலாளர் படையும், தாபிக்கப்பட்ட வழங்குநர்களின் உறவுகளும் வலுவான வாடிக்கையாளர் தளமும் அவரது வணிகத்தை வளர்ப்பதற்கு வசதியளிக்கின்றன. எவ்வாறாயினும், மட்டுப்படுத்தப்பட்ட நிதி வளங்கள் மற்றும் ஒரு சில பிரதான வாடிக்கையாளர்களைச் சார்ந்திருப்பது, போதிய IT அறிவு இல்லாமை ஆகியவற்றால் வணிகம் தனது விரிவாக்கத்தின்போது சவால்களை எதிர்கொள்கிறது. எனினும், சில ஐரோப்பிய நாடுகளில் பெண்கள் ஆடைகளுக்கான கேள்வி காணப்படுகிறது. நீடித்திருக்கத்தக்க நடைமுறைகளைக் கடைப்பிடிக்கின்ற அதே வேளை உலகின் தேவைகளைப் புரிந்துகொண்டு பல்வேறு ஆடை வகைகளுக்குமாக தனது வணிகத்தை பல்வகைப்படுத்த அவர் திட்டமிடுகிறார். மேலும், அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி தேய்வடைந்ததன் காரணமாக உற்பத்திச் செலவு கடுமையாக அதிகரித்துள்ளது.

பொருளாதார வீழ்ச்சி காரணமாக, இலங்கையில் நுகர்வோரின் செலவு செய்யும் திறனும் குறைவடைந்துள்ளது. நவநாகரிகப் போக்குகளில் காணப்படும் உள்நாட்டு மற்றும் சர்வதேச மாற்றங்களில் இருந்தான போட்டி, இயற்கை அனர்த்தங்கள், அரசியல் ஸ்திரமின்மை, வர்த்தகக் கட்டுப்பாடுகள் போன்ற காரணிகளால் ஏற்படும் வழங்கல் சங்கிலி இடையூறுகள், மற்றும் **ஆரியல் டெக்ஸ்டைல்ஸ்** இன் வணிகத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற தொழிலாளர் பற்றாக்குறைகள் என்பன அதிகரிக்கின்றன.

ஆடைத் தயாரிப்புத் தொழில்துறையில் ஏற்பாட்டியலின் (logistics) முக்கியத்துவத்தை ஆலோசகர் இனங்கண்டிருந்தார். வினைத்திறனான போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் இருப்பு முகாமைத்துவம் என்பன வாடிக்கையாளர்களுக்கு உற்பத்திப் பொருள்களை உரிய நேரத்தில் வழங்குவதை உறுதி செய்வதற்கு முக்கியமானவை ஆகும். **ஆரியல் டெக்ஸ்டைல்ஸ்** ஆனது ஏற்பாட்டியல் சவால்களை இழிவளவாக்குவதற்கு போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் செலவுகள் மற்றும் இருப்பு முகாமைத்துவ நுட்பங்கள் போன்ற காரணிகளைக் கவனமாகக் கருத்திற் கொள்ள வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஒன்றின் மூன்று (03) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி, **ஆரியல் டெக்ஸ்டைல்ஸ்** இன் வணிகச் சூழலை **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(c) ஒரு வணிகத்திற்கான போக்குவரத்து முறையைத் தெரிவுசெய்யும்போது கருத்திற் கொள்ள வேண்டிய மூன்று (03) முக்கியமான காரணிகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(d) **ஆரியல் டெக்ஸ்டைல்ஸ்** இற்கு ஒரு சிறந்த போக்குவரத்து முறைமை எவ்வாறு உதவும் என்பதை மூன்று (03) வழிமுறைகளில் (ways) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(e) ஒரு தொழில்முயற்சியாளர் என்ற வகையில் **ஆரியல்** இற்குத் தேவைப்படும் மூன்று (03) தொழில்முயற்சியாண்மைத் திறன்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |